# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1821/30 - 2013 ජූලි මස 31 වැනි බදාදා - 2013.07.31

1821/30 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு யூலை மாதம் 31 ஆந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்

**காணி எடுத்தற் சட்டம் (460 ஆம் அத்தியாயம் )**

**7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்**

குறிப்பு இல: இபு/20/17/எல்எல்ஏ/26/2008

பொது மக்களின் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருப் பதை, 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, காணி எடுத்தற் (திருத்தச்) சட்டப்படி திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக் கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :-**

பலாங்கொடை - பண்டாரவளை பாதை அபிவிருத்தித் திட்டம் தொடர்பாக காணி எடுத்துக் கொள்ளல்.

சப்பிரகமுவ மாகாணம், இரத்தினபுரி மாவட்டம், இம்புல்பே பிரதேச செயலக பிரிவில், கடவத கோரளை சீலகம கிராம அலுவலர் பிரிவில் சீலகம கிராமத்தில் அ. க. பி. 560 பிற்சேர்க்கை இல. 06 இல் காணி துண்டு இலக்கம் 171 முல்லே வத்த மற்றும் புராணே வத்த ஹேன எனும் டபிள்யூ. எம். நிஹால் பேமசிரி உரிமை கோரும் 0.0437 ஹெக்டயார் விஸ்தீரணம் உள்ள காணித்துண்டு.

மேற்குறித்த காணியில் உரித்துடையவர்கள், மற்றும் வேறு வகைகளில் தொடர்பு கூறுவோர் சகலரும் தாமாகவோ அல்லது எழுத்து மூலம் அதிகாரமளிக்கப்பட்ட காரியகாரர் மூலமாகவோ 2013.09.30 ஆந் திகதி, மு. ப. 9.30 மணிக்கு இம்புல்பே பிரதேச செயலகத்தில் என்னை சந்திக்குமாறு வேண்டுகின்றேன்.

மேலும், 2013.09.23 ஆந் திகதிக்கு முன்பதாக அக் காணி தொடர்பாக உரிமை உள்ளவர்கள் குறித்த காணி எடுத்துக்கொள்ளல் சம்பந்தமாக நட்டஈடு பெற தேவையான விடயங்கள், நட்ட ஈட்டுத் தொகை மற்றும் நட்ட ஈட்டுத் தொகையை கணித்த விதம் ஆகியவற்றை என்னிடம் இரு பிரதிகளுடன் எழுத்து மூலம் அறிவிக்க வேண்டும்.

ஜே. எல். சீ. கே. ஜயசிங்க,
பிரதேச செயலாளர்,
இம்புல்பே.

பிரதேச செயலகம்,
இம்புல்பே.
2013, யூலை 24.

8 - 560

---

**காணி எடுத்தற் சட்டம் (460 ஆம் அத்தியாயம் )**

**7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்**

குறிப்புடு இல.: PTB/LAND/AcquI/7/10

ஒரு பகிரங்க தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக் கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணிஎடுத்தல் (திருத்தச்) சட்டப்படி திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற்சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக் கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :-**

தென் மாகாணம், மாத்தறை மாவட்டம், பிட்டபெத்தர பிரதேச செயலக பிரிவில், கொடகள கிராம

உத்தியோகத்தர் பிரிவு ஹெவ்ஓவிட கிராமத்தில் அமைந்துள்ள நிலஅளவையாளர் நாயகத்தின் வரைபட இல. 15 துண்டு இல. 3 பிற்சேர்க்கை இல. 2 உம் 2013.06.21 ஆம் திகதி துண்டு இல. 98 உம் 99 விஸ்தீரணம் 0.0034 ஹெக்டயார் நிபுனச்சாரி கெவத்த பெலவத்த யும் மில்லககுபுர.

துண்டு இல. 98: காணியின் பெயர்: நிபுனச்சாரி கெவத்த பெலவத்த உம் மில்லககுபுர; விபரம்: திறந்த வெற்றுக் காணி; உரிமை கோருபவர்: தங்கெடுவ லியனகே சுஜீவ, பெலவத்த, கொடகல, பிட்டபெத்தர; விஸ்தீரணம்: 0.0017 ஹெக்டயார்.

துண்டு இல. 99: காணியின் பெயர்: நிபுனச்சாரி கெவத்த பெலவத்த உம் மில்லககுபுர; விபரம்: திறந்த வெற்றுக் காணி; உரிமை கோருபவர்: முனசிங்ஹ சேனாநாயக பிரசன்ன, பச்கொடகெதர, ஹெவ்ஓவிட, பிட்டபெத்தர; விஸ்தீரணம்: 0.0017 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2013 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 25 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு பிட்டபெத்தர பிரதேச செயலகத்தில் என்முன்பாக வெளிப் படுத்தும்படியும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை/எடுத்தற்கான நட்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நட்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2013.09.18 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் முப்பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

கே. ஜீ. ஆர். ஜயனாத்,
பிரதேச செயலாளர்,
பிட்டபெத்தர.

பிரதேச செயலகம்,
பிட்டபெத்தர,
2013, யூலை 29.

8 - 561

---

திருத்தம்

**காணி எடுத்தற் சட்டம் (460 ஆம் அத்தியாயம் )**

**7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்**

எனது இல: ம/அபி/03/226.

2011 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 10 ஆந் திகதிய 1718/17 ஆம் இலக்கம் கொண்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிஷேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட ஆரம்ப வரைபட இலக்கம் 3810 இல் துண்டு இல. 283 மற்றும் 291 இன் துண்டு இல. 331, 332, 333, 334 என கீழ்வருமாறு திருத்தம் செய்யப்பட்டுள்ளதென இத்தால் அறியத் தருகிறேன்.

**துண்டு இல. 331**

காணியின் பெயர்: கலஹகஹவத்த; விபரம்: வீட்டுத் தோட்டம், 15 - 20 வருட வயதுள்ள ஒரு தென்னை மரம் காணப்படுகின்றது; உரிமை கோருபவர்: அரசு; ஆரம்ப உரிமை கோருபவர்: டீ. ஏ. குலரத்ன, இல. 94, மங்கள மாவத்தை, இஹல கரகஹமுனு, கடவத்தை; விஸ்தீரணம்: 0.1035 ஹெக்டயார்.

**துண்டு இல. 332**

காணியின் பெயர்: கலஹகஹவத்த; விபரம்: கல்; உரிமை கோருபவர்: அரசு; ஆரம்ப உரிமை கோருபவர்: டீ. ஏ. குலரத்ன, இல. 94, மங்கள மாவத்தை, இஹல கரகஹமுனு, கடவத்தை; விஸ்தீரணம்: 0.0234 ஹெக்டயார்.

**துண்டு இல. 333**

காணியின் பெயர்: கலஹகஹவத்த; விபரம்: கல்; உரிமை கோருபவர்: அரசு; ஆரம்ப உரிமை கோருபவர்: டீ. ஏ. ஜயரத்ன, இல. 111, மங்கள மாவத்தை, இஹல கரகஹமுனு, கடவத்தை; விஸ்தீரணம்: 0.0199 ஹெக்டயார்.

**துண்டு இல. 334**

காணியின் பெயர்: கலஹகஹவத்த; விபரம்: வீட்டுத் தோட்டம், 10 - 15 வருட வயதுள்ள ஒரு தென்னை மரம் மற்றும் 20 - 25 வருட வயதுள்ள ஒரு கஜு மரம் காணப்படுகின்றது; உரிமை கோருபவர்: அரசு; ஆரம்ப உரிமை கோருபவர்: டீ. ஏ. ஜயரத்ன, இல. 111, மங்கள மாவத்தை, இஹல கரகஹமுனு, கடவத்தை; விஸ்தீரணம்: 0.2199 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2013 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 08 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு மஹர பிரதேச செயலகத்தில் என்முன்பாக வெளிப்படுத்தும்படியும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நட்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நட்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2013.08.08 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

தமரா டீ பெரேரா,
பிரதேச செயலாளர்,
மஹர.

பிரதேச செயலகம்,
மஹர,
2013, யூலை 20.

8 - 562

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.